# True Disciple

# உண்மை சீஷன்

January - March 2023 ஜனவரி – மார்ச்

A Quarterly News Bulletin of City Revival AG Church

நான் உன்னை ஆசீர்வதித்து
உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்;

## நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்

ஆதியாகமம் 122

I WILL BLESS YOU; I WILL MAKE YOUR NAME GREAT AND

*You Will Be a Blessing.*

# ஆசீர்வதிப்பேன்! ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்!!

பாஸ்டர். ஜெரி டேனியல்



**நான் உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி. 12:2)**

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள விசுவாசிகள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! தேவன் நமக்கு கிருபையாக தந்த இந்த புதிய ஆண்டிற்காக கர்த்தரை துதிப்போம்!'நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்' என்ற வாக்குத்தத்தத்தைதேவன் நமது சபைக்கு இந்த ஆண்டு தந்திருக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதித்து ஆசீர்வாதமாக மாற்றினார். கிறிஸ்துவுக்குள் ஆபிரகாமின் சந்ததியாயும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராகவும் இருக்கும் நம்மையும் தேவன் ஆசீர்வதித்து, ஆசீர்வாதமாக மாற்றுவார் (கலா. 3:29)!

**1. விலையேறப்பெற்ற ஆசீர்வாதம் (Priceless Blessing)**

முதலாவதாக, கர்த்தர் ஆபிரகாமுக்கு இரட்சிப்பு என்னும் ஆசீர்வாதத்தை கொடுத்தார். அந்நியதெய்வங்களை சேவித்து வந்த ஆபிரகாமை தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தின்படி கிருபையாக வேறுபிரித்து தம்மை பின்பற்றி வரும்படி செய்தார் (யோசுவா 24:2). 'உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தில் இருந்து அழைத்து வந்த கர்த்தர் நானே' என்று கூறுகிறார் (ஆதி. 15:7). நம்மையும் கர்த்தர் பாவத்திலிருந்து, அந்தகாரத்திலிருந்து, விக்கிரக ஆராதனை செய்வதிலிருந்து மீட்டு,இரட்சித்தது உன்னத ஆசீர்வாதம்! மனுஷன் உலகம் முழுவதும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை, ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மத். 16:26). ஆம், இரட்சிப்புதான் தேவன் நமக்கு அளிக்கும் பெரிதான ஆசீர்வாதம் (எபி. 2:4)!

**உ. தற்காலிக உலக ஆசீர்வாதங்கள் (Provisional Blessing)**

இரட்சிப்பை தொடர்ந்து தேவன் ஆபிரகாமுக்கு இந்த உலகில் தந்த அநேகஆசீர்வாதங்கள் குறித்து வேதம் கூறுகிறது. ஆதியாகமம் 12:5யை வாசிக்கும் போது தேவன் அவருக்கு அநேக ஆசீர்வாதங்களை கொடுத்ததை பார்க்கிறோம். சாராள் என்னும் பெயருள்ள வாழ்க்கைத் துணையை தந்தார் (Spouse). சாராள் அழகுள்ள, கீழ்ப்படிதலுள்ள,விசுவாசமுள்ள பெண் என்று வேதம் கூறுகிறது. (ஆதி. 12:11; 1 பேதுரு 3:5,6; எபி.11:11). தேவன் ஆபிரகாமுக்கு சம்பத்தை அளித்தார் (Substance). ஆபிரகாம் சீமானாயிருந்தான் என்று வேதம் கூறுகிறது (ஆதி. 13:2). மேலும் தேவன் ஆபிரகாமுக்கு அநேக வேலையாட்களை கொடுத்திருந்தார்(Servants). வெற்றியை கொடுத்தார் (Success). கானான் தேசத்துக்கு புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்(12:5). எடுத்த காரியம் முடிக்க கர்த்தர் கிருபை அருளினார். ஆதி. 14ம் அதிகாரத்தில் 4 ராஜாக்களோடு யுத்தம்பண்ணி வெற்றி பெறுகிறார் (14:14-16).வாக்குத்தத்தத்தின்படி தேவன் ஈசாக்கு என்னும் மகனை ஆபிரகாமுக்கு கொடுத்தார் (Son) (ஆதியாகமம் 21:1-3). அதுமட்டுமல்லாமல் தேவன் ஆபிரகாமின் பேரைப்

பெருமைப்படுத்தினார் (Significance). ஆபிரகாம் 'தேவனுடைய சிநேகிதன்' (யாக்கோபு 2:23). 'திரளான ஜாதிகளின் தகப்பன்' (ஆதி. 17:5). 'விசுவாசிகளின் தகப்பன்' என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். தேவன் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார் என்று வேதம் கூறுகிறது (ஆதி. 24:1). நாமும் இயேசு கிறிஸ்து மூலமாக ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறோம் (கலா. 3:29). கர்த்தர் நம்மையும் ஆசீர்வதித்து, பேரை பெருமைப்படுத்த வல்லவராயிருக்கிறார்!

**3. ஆசீர்வாதங்களின் நோக்கம் (The Purpose of the Blessing)**

கர்த்தர் ஆபிரகாமை மேற்கண்ட பல விதங்களில் ஆசீர்வதித்திருந்தார். ஆனால் அவைகளை கொடுத்ததின் நோக்கம் என்ன? அவைகளை தான் மட்டும் அனுபவித்து மகிழ்ந்திருக்கவா? கர்த்தர் என்னை எப்படி ஆசீர்வதித்திருக்கிறார் பாருங்கள் என்று சொல்லி பெருமை பாராட்டிக்கொள்ளவா? இல்லை. 'நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவே நான் உன்னை ஆசீர்வதிப்பேன்', என்று கர்த்தர் கூறுகிறார். (ஆதி. 12:2). மேலும் 'பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்' என்கிறார் (12:3). ஆம் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பது மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாக இருக்க! நம்முடைய இரட்சிப்பு, நம்முடைய குடும்பம், நம்முடைய சம்பத்து, நம்முடைய பெயர், புகழ், பதவி அனைத்தும் மற்றவர்களின் இரட்சிப்புக்கு, ஆசீர்வாதத்திற்கு, தேவ ராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இந்த ஆண்டு கர்த்தர் உங்களை அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்றுவாராக!

**4. ஆசீர்வாதமாய் இருக்க என்ன செய்ய வேண்டும்?**
**(The Price to be a Blessing)**

நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு, அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற என்ன செய்ய வேண்டும்? ஆபிரகாமின் வாழ்வில் இருந்து மூன்று காரியங்களை காட்ட விரும்புகிறேன். முதலாவது, கீழ்ப்படிதல். ஆபிரகாமின் வாழ்வில் தேவனுக்கு கீழ்படிதல் மேலோங்கி நிற்பதை நாம் காண முடியும். தேவனே அதைக் குறித்து சாட்சி கொடுக்கிறார் (ஆதி. 11:4:22:18; 26:4; எபி. 11:8). நாம் எந்த அளவு தேவனுக்கு கீழ்படிகிறோமோ, அந்த அளவு தேவன் நம்மை ஆசீர்வாதமாக மாற்றுவார். இரண்டாவது, பலிபீடம். ஆபிரகாம்தான் சென்ற இடங்களில் எல்லாம் பலிபீடம் கட்டினார் (ஆதி. 12:7,8:13:18). இது அவருக்கு தேவனோடுள்ள உறவை காட்டுகிறது. தனிப்பட்ட பலிபீடம், குடும்ப பலிபீடம் நம் வாழ்வில் மிகவும் அவசியம். உடைந்த பலிபீடங்களை சரிசெய்து, இந்த ஆண்டுதேவனோடு நல்ல, ஆரோக்கியமான, சீரான உறவை வளர்ப்போம்! மூன்றாவது, விசுவாசம். ஆபிரகாம் விசுவாச வீரர் (ஆதி. 15:6; ரோமர் 4:17-21; எபி. 11:8-10). தேவன் மீதும், அவரது வார்த்தைமீதும் உறுதியான விசுவாசம் வைப்போம். ஆபிரகாமைப் போல விசுவாசத்தில் வல்லவர்களாக மாறுவோம்.

**தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்! ஆசீர்வாதமாய் மாற்றுவார்!!**

# இயேசுவைப் போல

இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அவரைப் போல வாழ வேண்டும், அவருடைய சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. தேவன் நம்மை அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்து இருக்கிறார் (ரோமர். 8:29). ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுகிறோம் என்று பவுல் கூறுகிறார் (2கொரி. 3:18). மேலும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராக வேண்டும் என்பதை நம்முடைய இலக்காக இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபே. 4:13). நாம் இயேசுவைப் போல வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே இயேசுவின் வாழ்க்கையை சற்று கவனித்து அவரின் அடிச்சுவடுகளை பின்பற்ற தீர்மானிப்போம்.

**1. இயேசுவைப் போலக் கீழ்ப்படியுங்கள் :**

கிறிஸ்துவின் சிந்தைக் கீழ்ப்படிதலின் சிந்தை. அவர் தனது முதல் 30 ஆண்டுகளில் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நல்ல யூதனாக வாழ்ந்தார். தன்னுடைய பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்.2:51). அவர் தேவ குமாரனாயிருந்தும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று வேதம் கூறுகிறது (எபி. 5:8). இயேசு பிதாவுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த வாழ்க்கை வாழ்ந்தார். தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிவதே அவருடைய உணவாயிருந்தது (யோவான். 4:34). பிதாவின் சித்தம் செய்வதைத் தன்னுடைய குடும்பத்தைக் காட்டிலும் (மத். :46, 50), தன்னுடைய சொந்த விருப்பத்தைக் காட்டிலும் (லூக். 2:42), தன்னுடைய சொந்த ஜீவனைக் காட்டிலும் (பிலி. 2:8) முக்கியமாகக் கருதினார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதே அவருடைய பிரதான விருப்பமும், தாகமும், வாஞ்சையுமாயிருந்து (யோவான். 5:30 ; 14 : 31).ஆகவே இயேசுவைப் போல வாழ விரும்புகிற ஒவ்வொருவரும் அவர் கீழ்ப்படிந்தது போலக் கீழ்ப்படிய வேண்டும். பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமு. 15:22).

**2. இயேசுவைப் போல வேதத்தைப் படியுங்கள் :**

தேவனுடைய வார்த்தை இயேசுவின் வாழ்க்கையில் பரிபூரணமாக வாசமாயிருந்தது. 12 வயதில் தன்னுடைய வேத அறிவால் வேதப் பண்டிதர்கள் பலரை பிரமிக்கச் செய்தார் (லூக். 2:46, 47). இயேசு பழைய ஏற்பாட்டை நன்றாகக் கற்று மனனம் செய்து தன்னுடைய சம்பாஷணையிலும், சோதனை நேரத்திலும் பயன்படுத்தினார் (மத் 4:10; லூக் 23:46). இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (யோவான் 7:15). இயேசு பலமுறை, நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? என்று கேட்பதைப் பார்க்கிறோம் (மத் 12:3,5;19:5;21:42;22:3). அவர் நன்றாக வேதத்தை வாசித்திராத பட்சத்தில் அப்படிக் கேட்டிருக்க முடியாது. ஆகவே இயேசு கூறிய படி தினமும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து அவரைப் போல மாறுவோம் (யோவான் 5:39)

**3. இயேசுவைப் போல ஜெபியுங்கள் :**

இயேசுவினுடைய ஜெப வாழ்க்கையைக் கண்டு ஆச்சரியப்பட்ட சீஷர்கள் தாங்களுக்கும் ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள் (லூக்

11:1). வனாந்தரமான இடங்களுக்கும், மலைகளுக்கும் சென்று தனித்து ஜெபிப்பது அவருடைய பழக்கமாயிருந்தது (மத் 14:23; மாற்கு 6:46;லூக். 5:16). இயேசு அதிகாலையில் பிதாவின் முகத்தைத் தேடினார்(மாற்கு 1:35). இராமுழுவதும் ஜெபித்தார் (லூக் 6:1) என்று வேதம் கூறுகிறது. ஜெபம் அவருடைய வழக்கமாகவும், சுவாசமாகவும் இருந்தது. இயேசு மற்றவர்களுக்காக ஜெபித்தார் (லூக் 22:32;23:34) ஊக்கத்தோடே ஜெபித்தார் (லூக்.22:24). கண்ணீரோடே ஜெபித்தார் (லூக். 19:41). பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்து ஜெபித்தார் (மத்.26:39-54). ஸ்தோத்திரத்தோடே ஜெபித்தார் (மத். 15:36, லூக். 9:16). அவர் இன்றும் நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார் (எபி. 7:25). ஆகவே நாமும் அவரைப்போல ஜெபிக்க அர்ப்பணிப்போம். குறிப்பிட்ட இடத்தில் நேரத்தில் அவரோடு உறவாடப் பழகுவோம், ஜெப வீரர்களாய் மாறுவோம்.

**4. இயேசுவைப் போல அன்பு கூறுங்கள்:**

நான் உங்களிடத்தில் அன்பு கூறுவது போல, நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருங்களென்று இயேசு கூறினார். (யோவான் 13:34) கிறிஸ்துவே நமக்கு அன்பு கூறுவதில் சிறந்த மாதிரி. கிறிஸ்துவின் அன்பு மற்றவர்களுடைய நலனைத் தேடும் அன்பு (மாற்கு 10 :17-22) கொடுக்கும் அன்பு, தியாக அன்பு, ஆசீர்வதிக்கும் அன்பு, மன்னிக்கும் அன்பு (லூக். 7:36-50) மாற்கு 1: 40-42, யோவான் 20:24-29; 21:5-19, 8:1-11) இயேசு சமுதாயத்தினால் மறக்கப்பட்டவர்கள், வெறுக்கப்பட்டவர்கள் மற்றும் தள்ளப்பட்டவர்களை நேசித்து ஆசீர்வதித்து புது வாழ்க்கைக் கொடுத்தார். கிறிஸ்துவின் அன்பின் உச்சக்கட்டத்தைக் கல்வாரி சிலுவையில் காண்கிறோம். அது நம்முடைய ஜீவனையே நமக்காகக் கொடுத்த அன்பு (யோவான்15:13; ரோமர்8:,1 யோவான் 3:16). ஆதலால் இயேசு நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள். (எபே.5:1,2).

**5. இயேசுவைப் போல பரிசுத்தம் :**

பரிசுத்த வாழ்கைக்கு இயேசு நமக்கு சிறந்த முன்மாதிரி. இயேசுவினுடைய பரிசுத்தம் அவர் அக்கிரமத்தை வெறுத்து, நீதியை விரும்பினதில் விளங்குகிறது. (எபி. 1 : 9). இயேசு வார்த்தைகளிலும் செய்கையிலும் பரிசுத்தராயிருந்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனையோ, பொய்யோ காணப்படவுமில்லை (1பேது 2 :22; யோவான் 8: 45, 1 யோவான் 3: 15). அவர் எப்பொழுதுமே தேவனுக்குப் பிரியமானவைகளையே செய்து வந்தார் (யோவான் 8:9, மத்தேயு 17 :5). அவர் எல்லா விதத்திலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவரா யிருந்தார் (எபி 4:16).

அவருடைய பரிசுத்தத்தைக் குறித்து அநேகர் சாட்சி கொடுத்தார்கள். இவர் தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையென்று சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி ஒருவன் கூறினார். (லூக். 23:4). நான் இவரில் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்று பிலாத்து கூறினார். (லூக். 23 23:4,16:22) மெய்யாகவே இவர் நீதிபரர் என்று ஒரு நூற்றுக்கு அதிபதி (லூக்கா 23:47) அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், போன்றோர் அவர் குற்றமில்லாதவரென்று அறிக்கையிட்டனர் (மத். 27:4) பிலாத்துவினுடைய மனைவி அவர் நீதிமானென்று கூறினாள் (மத். 27: 19). இயேசுவும் இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று சவால் விட்டுக்

கூறினார் (யோவான் 14: 30). ஆகவே நாமும் அவரைப் போல நம்முடைய எல்லா நடக்கையிலும் பரிசுத்தமாயிருப்போம் (1பேதுரு 1: 15).

**6. இயேசுவைப் போல தாழ்மை -**

இயேசுவின் சிந்தை தாழ்மையின் சிந்தை. நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்று இயேசு கூறினார். (மத்.11:29). தன்னை தாழ்த்தி இவ்வுலகத்திற்கு மனிதனாக வந்தார். மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் (லூக்கா 2:7). பாவிகளின் சிநேகிதாக வாழ்ந்தார். (மத் .11: 19). சீஷர்களின் கால்களை கழுவினார் (யோவான் 13: 12-17). சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தாழ்த்தினார் (பிலி . 2 :8) . தாழ்மையைக் கற்றுக் கொடுத்தார் (மத் . 18 : 1-4; லூக். 14:7-11). மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினார் (நீதி. 15:33;18:12; பிலி. 2:9-11)

**7. இயேசுவைப் போல ஊழியம் செய்யுங்கள்:**

இயேசு மற்றவர்களுக்கு ஊழியம் செய்யத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். அவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படிக்கே வந்தார் ( மாற்கு 1: 45). இயேசு சாதாரண வேலைக்காரர்கள் செய்யும் வேலையையும் செய்யத் தயங்கவில்லை. சீஷர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவான் 13: 1-5,15-17; லூக்கா 22:27). வியாதியஸ்தர்கள்மேல் கரங்களை வைத்து ஜெபித்தார். சுகம் தந்தார் (லூக்கா 4:40). பசித்தவர்களுக்குப் போஜனம் கொடுத்தார் (மத் .15: 22). போஜனம் பண்ணவும் சமயமில்லாத அளவிற்கு ஜனங்களை முன்வைத்து ஊழியம் செய்தார் (மாற்கு 3: 20 ;6:310. பட்டணங்கள், கிராமங்கள் தோறும் சுற்றி நடந்து சுவிசேஷத்தை அறிவித்தார் (மத்தேயு 4: 23). ஜனங்களுக்காக மன்றாடினார். ஜனங்களுக்கு வசனத்தைப் போதித்தார். ஜனங்களுக்கு அற்புதம் செய்தார். ஜனங்களுக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இயேசுவின் சீஷர்கள் அவருடைய வழியில் ஜனங்களுக்கு ஊழியம் செய்தனர் என அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

தேவ ஜனமே, இயேசு நமக்கு மாதிரியை வைத்துச் சென்றிருக்கிறார் (யோவான் 13: 15, 1 பேதுரு 2:21). நாம் அந்த மாதிரியைப் பின்பற்றுவோம். இயேசுவைப் போல மாறுவோம். மறுரூபமாவோம்!

## உண்மையான எழுப்புதலின் அடையாளங்கள்

இஸ்ரவேலர் எருசலேமின் சுவர் எழுப்பப் பட்டபோது உண்மையான எழுப்புதலின் அடையாளங்களை வெளிப்படுத்தினார். (நெகேமியா 8:1-10)

1. **மக்களிடையே ஒருமனம்** : ஜனங்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டுக் கூடினார் (8:1)
2. **வார்த்தையின் (வசனத்தின்) மீது வாஞ்சை** : சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்குக் கவனமாய் செவி கொடுத்தார்கள். (8:3)
3. **கர்த்தருக்குக் கனம்** : "ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து குனிந்து, முகங்குப்புற விழுந்து கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள்" (8:6)
4. **பாவத்தின் மீது வெறுப்பு** : "ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது அழுதனர்....." (8:9)
5. **கர்த்தருக்குள் மகிழ்ச்சி** : " ......... கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான் "(8:10)

# நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய 30 வாழ்க்கை கொள்கைகள்

Dr.சார்லஸ் ஸ்டேன்லி

1. நாம் தேவனோடு கொண்டிருக்கும் நெருக்கம், நம் வாழ்வில் அவருக்கு இருக்கும் முக்கியத்துவம் ஆகியவை நமது வாழ்வில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்கிறது.
2. நாம் தேவனுக்கு கீழ்படிந்து அனைத்து விளைவுகளையும் அவர் கரத்தில் விட்டுவிட வேண்டும்.
3. புயல் போன்ற சூழ்நிலைகளில் தேவனுடைய வார்த்தையே நமது நங்கூரம்.
4. தேவனுடைய பிரசன்னத்தை உணர்ந்திருப்பது நமது வேலைகளில் நமக்கு உற்சாகம் அளிக்கிறது.
5. தேவன் நாம் அவருடைய சித்தத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை; மாறாக அது அர்த்தமற்றதாய் தோன்றினாலும் நாம் அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்.
6. நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்; விதைத்ததை விட அதிகமாக அறுப்போம்; சிலகாலம் சென்ற பின்பு அறுப்போம்.
7. நம் வாழ்வில் இருளான தருணங்கள் தேவன் நமது நோக்கத்தை நம் வாழ்வில் நிறைவேற்றி முடிக்கும் வரை மட்டுமே நீடிக்கும்.
8. நமது வாழ்வில் அனைத்து யுத்தங்களையும் முழங்காலில் நின்று போராடினால் ஒவ்வொரு முறையும் ஜெயம் பெறுவோம்.
9. நம்மால் காண முடியாததை தாண்டி தேவன் காண்பதை தரிசிக்க முயல்வதே தேவனை விசுவாசிப்பதாகும்.
10. அவசியமெனில் தேவன் வானத்தையும் பூமியையும் அசைத்து தமது சித்தத்தை நமக்கு காண்பிப்பார்.
11. நாம் தேவனுக்கு கீழ்படியும் போது அவர் நமது தேவைகளை நிறைவேற்ற பூரணமாக பொறுப்பேற்றுக் கொள்கிறார்.
12. தேவனுடன் சமாதானமாக இருப்பது என்பது அவருடன் ஒன்றித்திருப்பதின் கனியாகும்.
13. தேவனுடன் நடக்க அவருக்கு செவிமடுப்பது மிகவும் அவசியம்.
14. நமக்காக காத்திருப்பவர்கள் சார்பாக தேவன் செயல்படுகிறார்.
15. தேவனுக்காக அதிகமாக பயன்பட அதிகமாக உடைக்கப்பட வேண்டியது தேவனுடைய நியதியாய் இருக்கிறது.
16. கர்த்தருடைய சித்தமின்றி நாம் சவதரிக்கும் எதுவுமே சாம்பல் போல வீணாக அழிந்துவிடும்.
17. நாம் நமது முழங்காலில் நிற்கும் போது உயர்ந்தவர்களாகவும், வலிமையானவர்களாகவும் இருக்கிறோம்.
18. நாம் சர்வவல்ல தேவனின் பிள்ளைகளாய் இருப்பதால் நாம் சூழ்நிலைகளுக்கு பலியாவதில்லை.
19. நாம் எதையாவது அளவிற்கு அதிகமாக இறுக்கி பற்றி கொண்டால் அதை இழந்து விடுவோம்.
20. ஏமாற்றங்கள் தவிர்க்க முடியாதவை; அதற்காக சோர்ந்து போவது என்பது நமது தேர்வு.
21. கீழ்படிதல் எப்பொழுதும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.
22. ஆவியில் நடப்பது என்பது ஆவியானவரின் தூண்டுதலுக்குக் கீழ்படிவதாகும்.
23. நாம் ஒருபோதும் தேவனை விட தாராளமாக/அதிகமாக கொடுத்து விட முடியாது.
24. இயேசுவை நம்மிலும், நம் மூலமாகவும் வாழ அனுமதிப்பதே கிறிஸ்தவ வாழ்வாகும்.
25. நாம் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கவே தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.
26. துன்பம் என்பது தேவனுடன் நமக்கு ஆழமான உறவை ஏற்படுத்தும் பாலம்.
27. நம் வாழ்வில் நேரத்தை ஆதாயம் செய்ய சிறந்த வழி ஜெபிப்பது. ஜெபம் மிகச்சிறந்த கால ஆதாயக் கருவி.
28. எந்த ஒரு கிறிஸ்தவரும் விசுவாச பாதையில் தனியாக நடக்க அழைக்கப்படவில்லை.
29. மலை உச்சியின் அனுபவங்களை விட பள்ளத்தாக்கின் அனுபவங்களில் நாம் அதிகமாக கற்றுக் கொள்கிறோம்.
30. கர்த்தருடைய வருகையை ஆவலுடன் எதிர் நோக்குவது நம் வாழ்வை பயனுள்ளதாக வாழ உதவுகிறது.

மொழியாக்கம் Sis.ஆக்னா ஜான்

## வேதத்திலிருந்து பெருமளவு நன்மைபெற ஏழு படிகள்



தேவன் மனிதனுக்குக் கொடுத்த மிகப்பெரிய பரிசுகளில் ஒன்று பரிசுத்த வேதாகமம். ஆகவே நாம் அதை வாசிப்பதிலும், படிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆண்டில் வேதகமத்தில் எழுதப்பட்ட செய்திகளிலிருந்து பெருமளவு நன்மை பெற இதோ ஏழு படிகள்.

**1. அங்கீகரியுங்கள்** (Receive) : வேதத்தை வாசிக்கும்பொழுது அது சிறப்பாக உங்களுக்கென்றே வரும் தேவ செய்தியாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுங்கள். வசனத்தை விசுவாசத்தோடும் (எபி.4:2). எல்லாச் சாந்தத்தோடும் (யாக்.1:21) ஏற்றுக்கொள்ளுங்கள். வசனத்துக்குக் கீழ்படிந்து அதற்கு அடிபணிவோர் வாழ்வில் வசனம் அற்புதங்களைக் கொண்டுவரும்.

**2. அசைபோடுங்கள்** (Ruminate) : இது தான் தியானித்தல் என்பது. பசுமாடு அசைபோடுது போல் நாமும் கேட்டதைத் திரும்பச் சிந்திக்க வேண்டும். வேலைகள் மிகுதியாவதால் விசுவாசிகள் இக்கலையை இன்று மறந்து வருகின்றனர். தியானமானது இருதயத்தைக் கீழ்படிதலுக்கு நேராய் நடத்துகிறது. வேலைக்கு வெளியே செல்லும் போது, காலையில் வேதத்திலிருந்து வாசித்ததை இருதயத்தில் சுமந்து செல்லுங்கள். (யோசுவா 1:8; சங். 1:2; 119:97)

**3. ஆராய்ந்து பாருங்கள்** (Refer) : வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்றார் இயேசு (யோவான் 5:39). கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசிக்க வேண்டும். (ஏசா. 34:16). வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் படிக்க வேண்டும். ஒரு பகுதியை இன்னொரு பகுதி விளக்கும். தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் பெரோயா பட்டணத்தார் தெசலோனிக்கேயரைவிட நற்குணசாலிகளாயிருந்தனர். (அப். 17:11).

**4. அப்பியாசியுங்கள்** (Reform) : வெறும் அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அறிவு அனுபவமாக வேண்டும். அறிந்து கொண்ட சத்தியம் கீழ்ப்படிதலுக்கு நேராக நடத்த வேண்டும். வாழ்வு மறுரூபமாக வேண்டும். வேதத்தை ரசித்தால் போதாது. அதை ருசிக்கவும், அப்பியாசிக்கவும் வேண்டும்! கேட்பது, வாசிப்பது, தியானிப்பது ஆகியவற்றிலிருந்து தெளிவான கட்டளைகள் உண்டா என்று கவனியுங்கள். கீழ்ப்படியத் தாமதம் வேண்டாம். ஒவ்வொரு கீழ்ப்படிதலும் புதிய வெளிப்பாடுகளைக் கொண்டுவரும்.

**5. அகற்றுங்கள்** (Remove) : வசனமென்பது விதையாகும். நமது வாழ்வே நிலமாகும். நாம் கனி நிறைந்திருக்க வேண்டுமென்பது தேவனது விருப்பம். ஆனால் நாம் கனி கொடுக்க, அகற்றப்பட வேண்டிய சில தடைகள் உண்டு. அவிசுவாசிகளின் ஐக்கியம் (சங். 1:1). உலக சிந்தை, பொருளாசை (மத். 13:22), உறவுப் பிரச்சனைகள் (1 பேதுரு 2:1,2) ஆகிய தடைகள் அகற்றப்படும்போது வேதத்திலிருந்து பெருமளவு நன்மை பெறலாம்.

**6. அறிவியுங்கள்** (Relate) : வேதத்திலிருந்து கற்றுக்கொண்டவைகளை பிறருடன் பகிர்ந்துகொள்ளுங்கள் (எஸ்றா 7:10). தேக்கம் வேண்டாம். கொடுக்கவே பெறுகிறோம். உரையாடல்கள், கடிதங்கள், பராமரிப்புக்குழுக்கள் மூலம் சத்தியங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். வயல்வெளிகளில் நடக்கும்போதும், பயண வேலைகளிலும் அல்லவா இயேசு அறிவித்த சத்தியங்களில் பெரும்பாலானவற்றைப் பகிர்ந்துகொண்டார். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் (லூக்கா. 6:38; நீதி. 11:25, 26).

**7. ஆராதியுங்கள்** (Revere) : வசன அறிவு யாவும் நம்மை ஆராதனைக்குள் நடத்த வேண்டும். வசனத்தில் தேவனை அறிவதே தேவனது வசனத்தை ஆராய்வதின் நோக்கமாகும். இந்த அறிவினால் ஆராதனை சிறப்பாகும் (சங். 138:2).

## புதிய ஆண்டில் மாற்றம் செய்வோம்




1. தேவ உறவில் மகிழ்ந்திருக்க நீங்கள் இவ்வாண்டில் செய்ய தீர்மானிக்கும் ஒரு காரியம் என்ன?
2. நீங்கள் தேவனிடம் கேட்கும் மனிதனால் கூடாத ஒரு காரியம் என்ன?
3. இவ்வாண்டில் குடும்ப வாழ்வின் தரத்தை உயர்த்த நீங்கள் செய்யக் கூடிய மிக முக்கியமான ஒரு காரியம் என்ன?
4. இவ்வாண்டில் ஆவிக்குரிய (ஆன்மீக) வாழ்வில் முன்னேற்றம் அடைய நீங்கள் செய்ய வேண்டிய ஒழுங்குமுறை என்ன?
5. தேவ கிருபையால் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டை வேறுபடுத்த நீங்கள் முயற்சிக்கும் முக்கியமான வழிமுறை என்ன?
6. இவ்வாண்டில் உங்கள் ஜெப வாழ்வை உயர்த்த நீங்கள் செய்யப் போகும் ஒரு காரியம் என்ன?
7. அடுத்த பத்து ஆண்டுகளுக்கு அல்லது நித்தியத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இவ்வாண்டில் நீங்கள் செய்யத் திட்டமிடும் ஒரு காரியம் என்ன?
8. இவ்வாண்டில் உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் உங்கள் நினைவாக நீங்கள் விட்டுச் செல்லக் கூடிய ஒரு ஆன்மீக (Legacy) சொத்து என்ன?
9. நீங்கள் தேவனிடமிருந்து இவ்வாண்டில் மிக ஆர்வமுடன் தேடிப் பெறக் கூடிய ஒரு ஆசீர்வாதம் என்ன?
10. உங்கள் வாழ்வில் எப்பகுதியில் முக்கியமான மாற்றம் செய்ய வேண்டியுள்ளது? அதைக் குறித்து இவ்வாண்டில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

## Make a Difference in the New Year

The following list of questions will help us as we consider how this year can be different from last year.

- What's one thing you can do this year to increase your enjoyment of God?
- What's the most humanly impossible thing you will ask God to do this year?
- What's the single most important thing you could do to improve the quality of your family life this year?
- In what spiritual discipline do you most want to make progress this year, and what will you do about it?
- What's the most important way you will, by God's grace, try to make this year different from last year?
- What one thing could you do to improve your prayer life this year?
- What single thing that you plan to do this year will matter most in 10 years? In eternity?
- What's one thing you could do this year to enrich the spiritual legacy you will leave to your children and grandchildren?
- What single blessing from God do you want to seek most earnestly this year?
- In what one area of your life do you most need to change, and what will you do about it this year?

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue* : **CITY REVIVAL AG CHURCH**

**Tuesday & Friday at 4.00 p.m to 6.30 p.m**
**Thursday at 10.30 a.m to 1.00 p.m**

**Contact : 98438 51115**



# ஆண்கள் ஐக்கியம்
## Men's Fellowship

**ஒவ்வொரு மாதமும் 3-வது திங்கட்கிழமை மாலை 6.30 மணி**

ஆண்கள் அனைவரும் பங்குபெறுங்கள்.

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்
## *LADIES REVIVAL PRAYER*

வியாழன் தோறும்
காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை



# வாலிபர் ஐக்கியக் கூடுகை
## Youth Fellowship



*முதல் மற்றும் மூன்றாம் ஞாயிறு*
*மாலை 4.30 மணி*

வாலிப சகோதர, சகோதரிகள் அனைவரும் பங்குபெறுங்கள்.

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930
Branch Code : 00930

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196
Branch Code : 001196

# Blessed to be a Blessing

**I will bless you, I will make your name great; You will be a blessing! (Genesis 12:2)**

***Rev. Dr. Jerry Daniel***



Greetings to you all in the wonderful name of our Lord Jesus Christ! God has graciously given us another year in our life. The Lord has promised that he will bless us and make us a blessing to many in this year.

God blesses us in many ways, for the purpose of us passing these blessings on to others. We are to be like the sluices in a dam, pouring out its abundant water to those in need. We are to be a church of blessing! We see this principle illustrated in the life of Abram. Spiritually, we are Abraham's seed and we inherit this promise (Galatians 3:29).

**1. THE PRICELESS BLESSING**

First, we must acknowledge the greatest blessing that Abram experienced was salvation. Abram was an unbeliever, deserving of divine wrath; a man who was guilty of idolatry (Joshua 24:2). And yet God graciously chose to have a relationship with him. God chose to save him; God chose to sovereignly call Abram out of the power of darkness unto the kingdom of His dear Son. That is blessing indeed! God says, "I am the LORD who brought you out from Ur of the Chaldeans to give you this land to possess." (Gen. 15:7). The greatest blessing in this world is the blessing of salvation from sin. The Bible says, "what does it profit to gain the whole world and yet to lose one's soul?"

**2. THE PROVISIONAL BLESSINGS**

We can look further at some other blessings that Abram was given. A **Spouse:** Genesis 12:5 tells us that Abram was also blessed with a gift of spouse—Sarai (later, Sarah). The Word commends her as a beautiful woman (12:11) but, more importantly, she was beautiful in her spirit (1 Peter 3:5-6) and in her spirituality (Hebrews 11:11). Abram was indeed blessed with a wonderful wife. **Substance:** God blessed Abram with substance. Abram travelled with quite a lot of "substance" and we know from 13:2 that Abram was very wealthy. Truly, Abram was blessed, and perhaps even increasingly, with great substance. **Servants:** Abraham was given the blessing of "people or servants" (12:5). He went with a fairly large crowd of people to Canaan. He had been blessed with personnel for the task ahead. **Success:** Abram, according to 12:5, was further blessed with success. He set out for Canaan and into the land of Canaan he came. He was able to finish what he started to do! **Son :** In Genesis 21:1-3, God blessed Abraham with a son of promise. The blessing of a child and heir is a promise of God's word (Ps. 127:4). **Significance:** God told Abraham that he will make his name great. Here is a list of the "great names" given to Abraham: God's friend (James. 2:23), Father of many nations (Gen. 17:5), Father of all who believe (Rom. 4:11).

Abraham was blessed abundantly. In addition to the greatest blessing of salvation, he was blessed with a spouse, with substance, with souls (servants),

with success, with significance and with a son. If we belong to Christ, then we are Abraham's seed, and heirs according to the promise. May the Lord grant all these blessings in our lives in this year!

**3. THE PURPOSE OF THE BLESSINGS**

The Bible says that the Lord had blessed Abraham in all things (Genesis 24:1). But the question must be answered, "For what purpose?" What was the reason for all of these blessings? Were they simply for Abram's sake, for the enriching of his life alone? Perhaps our self-absorbed culture would respond with an enthusiastic, "Yes!" But the text of Scripture will not allow it. For the Scripture says in Genesis 12:2, "And You will be a blessing," and 12:3 adds, "and in you shall all the families of the earth be blessed." God plainly states that He is not merely blessing Abram for Abram's own sake, but so that Abram will be a blessing to "all the families of the earth" (12:3).

God saves us to save others. God blesses us with substance and other things so that we will use them for the blessing of others and for the expansion of His kingdom!

**4. THE PRICE TO BE A BLESSING**

Finally, we need to know what it will take to be a blessing in the face of being blessed. From the life of Abraham, I want to highlight three things! Obedience.In Abraham, we see the very pinnacle of human obedience (Gen. 11:4; 22:17,18; 26:4,5; Heb. 11:8). He exhibits very clearly that God is first in his life. To the degree that we obey Him, to that degree we will be a blessing. Altar. Another important aspect in Abraham's life is altar (Gen. 12: 7,8; 13:18). Wherever he went, he built altars for God. It signifies his relationship with God. We must have personal altar and family altar. Repair your broken altars and always keep a healthy and consistent relationship with God. Faith. Abraham was a man of faith (Gen. 15:6; Rom. 4:17-21; Heb. 11:8-10). We must have strong faith in the person of God and promises of God.

**Pray for the Missionaries we Support**



Missionary: Surya Narayana Thapa - Mrs. Ranjitha Lapang Thapa



Missionary: Samuel - Mrs. Shanmuga Priya

(West Bengal)



Missionary: Yesu Prakash - Mrs. Sunanda Belly



Missionary: Joshua Bagh - Mrs. Silpa Bagh



Missionary: Yuvaraj - Mrs. Jaishree

# Living Like Jesus

One of the recurring themes in the New Testament is that believers are to strive to become more and more like Jesus Christ. It is God's plan for each of us that we "be conformed to the likeness of his Son" (Romans 8:29; 2 Corinthians 3:18; 1 John 3:2).We are called to live like Jesus. We do not need to look like him physically. We do not try to match his carpentry skills or his language skills. Rather, we are to be like him in our behaviour and in our devotion to God.

**1. Obey like Jesus**

Jesus was obedient to his earthly parents when he was young (Luke 2:51). He was obedient to the Law of Moses as a sincere Jew (Matthew 5:17, 18; 22:37-40). He was obedient to secular authorities (Mt 17:24-27; Mt 22:17-21). The Bible says, "Although Jesus was the Son of God, he learned to be obedient" (Hebrew 5:8). As a perfect Son of God, He lived a life of complete obedience to His heavenly Father. Doing the will of His Father was his food and burning passion (John 4:34; 5:30; 14:31; Luke 22:42). Obedience was central to Jesus Christ's life and thought (Hebrews 10:7; Matt. 3:15; John 6:38). He was obedient until his death (Phil. 2:8). His obedience ultimately brought redemption to mankind (Romans 5:19).

Believers should follow Jesus Christ's example of obedience. In fact, obedience is an essential part of the Christian faith. Obedience means taking up our cross and following Christ (Matthew 16:24). Obedience to God's will must be paramount in our lives (Matt. 7:21; 12:50). The Bible says that we show our love for Jesus by obeying Him in all things: "If you love me, keep my commandments" (John 14:15). Obedience should characterise our whole lifestyle arising from a relationship with God through Jesus Christ (Acts 5:29; 2 Cor. 2:9).

**2. Study the Bible like Jesus**

The life of Jesus was saturated with the Word of God. Luke 2:46,47 records the story of how Jesus at age twelve stunned the scholars with his knowledge of Scriptures. Jesus studied the Old Testament by verses, holding them in his memory, and quoting them in his conversation and in His spiritual crises (Matthew 4:11; Luke 23:46). He studied it by books and divisions (Luke 24:44). The Jews were amazed and asked, "How did this man get such learning without having studied?" (John 7:15).

Six times Jesus asked the question "Haven't you ever read?" (Mt.12:3, 5; 19:4; 21:16; 21:42; 22:31). Jesus would never have asked that if He himself had not read what He talked about. Why not imitate Jesus' habit of Scripture-study. Jesus said, "Study the Scriptures diligently' (John 5:39). Read four chapters during the weekdays and five during the weekends and guess what will happen? You would have read through the Bible in a year!

**3. Pray like Jesus**

Amazed by the prayer life of Jesus, the Apostles came to Him and asked, "Lord, teach us to pray' (Luke 11:1). Jesus often withdrew to the wilderness and mountains for prayer (Matt. 14:23; Mark 6:46; Lk.5:16). He went to look at his Father's face very early in the morning when it was still dark! (Mk.1:34-35). Prayer was his habit and very breath! Think about his prayers- unselfish prayer (Luke 22: 32), forgiving prayer

(Luke 23:34); earnest prayer (Luke 22:44), submissive prayer (Matthew 11:26; 26:39-54), thanksgiving prayer (Matt. 15:36; Luke 9:16). The Bible tells us that he continues to pray for us even now (Hebrews 7:25).

The characteristics of his prayer life as we have found in the gospels must be the characteristics of ours. Slot a time for prayer in your daily schedule. Fix up an undisturbed place. Talk to God. You can talk about everything to Him at any time. Don't just mumble here and there prayers. Instead, become a person of prayer!

**4. Love like Jesus**

During the Last Supper, Jesus gave his disciples a new commandment. He told them to love one another as he had love them (John 13:34). Jesus made it clear that his love should be our model for loving others. But what does it mean to love as Jesus loved? What are the characteristics of a truly Christ-like love?

A Christ-like love desires what is best for the other (Mark 10:17-22). It understands and accepts the emotions of others, rejoicing with those who rejoice and weeping with those who weep (John 11:32-44). It is generous and does not calculate the cost of giving (Luke 7: 36-50). It is not repulsed by illness or ugliness (Mark 1:40-42). It is patient and forgiving (John 20:24-29; 21:15-19; 8:1-11). It is not just an emotion; it is also a decision (John 13:1-15). Loving like Jesus means that we love the forgotten, the unlovely, the least and the lost in our community.

Jesus loved us so much that he gave his very life on the cross of Calvary. His love is sacrificial and self-giving (John 15:13; Rom. 5:8; 1 John 3:16). Therefore, 'be imitators of God, as dearly loved children and live a life of love, just as Christ loved us' (Ephesians 5:1, 2).

**5. Be Holy like Jesus**

Jesus has set an absolute standard of purity. The holiness of Jesus Christ manifested itself in a love of righteousness and a hatred of iniquity (Hebrews 1:9). The holiness of Jesus Christ was seen in his word and deed. Negatively, in his never doing sin or speaking falsehood (1 Peter 2:22; John 8:46; 1 John 3:5). And positively, in his always doing what was pleasing to God (John 8:29; Matt. 17:5). His holiness also manifested itself in constant and never-failing victory over temptation (Heb. 4:16). Jesus boldly asked, 'Can any of you prove me guilty of sin? (John 8:46). The life of Jesus was impeccable! Absolutely spotless!

Several people also witnessed to the holiness of Jesus. The dying thief said that Jesus had done nothing wrong (Luke 23:41), the Roman Centurion exclaimed that he was a righteous man (Luke 23:47), Pilate's wife asserted that he was a just man (Matthew 27:19), Pilate declared that he had found no fault in him (John 18:38). Judas Iscariot believed that he had betrayed the innocent blood (Matthew 27:3-4). Jesus himself said, 'the prince of this world is coming and he has nothing in me (John 14:30). Be holy just as he is holy (1 Peter 1:15, 16)!

**6. Serve like Jesus**

Jesus is the ultimate example of a man who desired to serve others. Throughout the days of His earthly ministry, He was totally involved in serving others. In Mark 10:45, He said to His ambitious disciples, "For even the Son of Man did not come to be served, but to serve, and to give His life a ransom for many." Gospels are filled with accounts that prove His commitment to serving others.

Jesus did tasks that were generally left to the servants, like washing feet (John 13:1-5, 12-17; Luke 22:27). He never missed an opportunity to serve others. He spent His lifetime blessing the sick and feeding the hungry. He was busy yet he stopped to heal people (Mark 5:30; 10:49). He always put people before Himself. And it brought Him great joy and peace. Jesus also spent His entire earthly life serving His father in Heaven. He put His father's desires before His own.

The essence of Christian life is following the example of Christ. Jesus provides us with an example of imitation. He walked the pathway first. Now, we must follow "in his steps" (I Pet. 2:21). God bless you!

## Year of Spiritual Transformation

## ஆவிக்குரிய மறுரூபத்தின் ஆண்டு

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும்,
பிரியமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக,
உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:2**

***Do Not Conform Any Longer To The Pattern Of This World, But Be Transformed By The Renewing Of Your Mind. Then You Will Be Able To Test And Approve What God's Will Is--his Good, Pleasing And Perfect Will.***

**நாமெல்லாம் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே
காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே
மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். 2 கொரி. 3:18**

***But we all, with unveiled face, beholding as in a mirror the glory of the Lord, are being transformed into the same image from glory to glory.***

## "EVIDENCES OF TRUE REVIVAL"

*Nehemiah 8:1-10*

The Israelites displayed evidences of true revival at the completion of the wall.

1. **HARMONY AMONG THE PEOPLE**
   *"...the people gathered as one..."* (8:1)
2. **HUNGER FOR THE WORD**
   *"...all the people were attentive to the book of the law..."* (8:3)
3. **HONOR FOR THE LORD**
   *"...they bowed low and worshiped the Lord..."* (8:6)
4. **HATRED FOR SIN**
   *"All the people were weeping when they heard..."* (8:9)
5. **HAPPINESS IN THE LORD**
   *"...for the joy of the Lord is your strength..."* (8:10)

## 40 நாட்கள் உபவாச ஜெபம்

## 40 Days Fasting Prayer

**மார்ச் 6, திங்கள் முதல் ஏப்ரல் 15, சனி வரை**

# The 30 Life Principles We All Must Know

1. Our intimacy with God – His highest priority for our lives – determines the impact of our lives.
2. Obey God and leave all the consequences to Him.
3. God's Word is an immovable anchor in times of storm.
4. The awareness of God's presence energizes us for our work.
5. God does not require us to understand His will, just obey it, even if it seems unreasonable.
6. You reap what you sow, more than you sow, and later than you sow.
7. The dark moments of our life will last only so long as is necessary for God to accomplish His purpose in us.
8. Fight all your battles on your knees and you win every time.
9. Trusting God means looking beyond what we can see to what God sees.
10. If necessary, God will move heaven and earth to show us His will.
11. God assumes full responsibility for our needs when we obey Him.
12. Peace with God is the fruit of oneness with God.
13. Listening to God is essential to walking with God.
14. God acts on behalf of those who wait for Him.
15. Brokenness is God's requirement for maximum usefulness.
16. Whatever you acquire outside of God's will eventually turns to ashes.
17. We stand tallest and strongest on our knees.
18. As children of a sovereign God, we are never victims of our circumstances.
19. Anything you hold too tightly, you will lose.
20. Disappointments are inevitable, discouragement is a choice.
21. Obedience always brings blessing.
22. To walk in the Spirit is to obey the initial promptings of the Spirit.
23. You can never out give God.
24. To live the Christian life is to allow Jesus to live His life in and through us.
25. God blesses us so that we might bless others.
26. Adversity is a bridge to a deeper relationship with God.
27. Prayer is life's greatest time saver.
28. No Christian has ever been called to "go it alone" in his or her walk of faith.
29. We learn more in our valley experiences than on our mountaintops.
30. An eager anticipation of the Lord's return keeps us living productively.

***Dr. Charles Stanley***

## 7 STEPS TO BENEFIT MAXIMUM FROM THE HOLY BIBLE



The greatest gift of God to man, next to His Son and His Spirit is the Holy Scriptures. So we need to give utmost importance to the study of God's word. Here are seven steps to benefit maximum from the Bible.

**1. RECEIVE** : Receive the Word as a personal message from God whenever you read or hear God's word (Matthew 26:21, 22). Receive the Word with Faith (Heb. 4:2) and with all meekness (James 1:21). God is pleased with those who tremble at His Word (Is. 66:1,2). 'Yes Lord, I surrender' must be our attitude. God's word performs unbelievable miracles in the lives of those who bow down and say yes.

**2. RUMINATE** : Rumination is a zoological term equivalent to meditation. Just like the animal chews the cu, we are to think over our intake again and again. To meditate means to ponder over, to reflect. It is becoming a lost art because men are becoming busier and busier. Meditation leads us from hearing to understanding. It prepares our heart for obedience (Read Jos. 1:8; Ps. 1:2; 119:97)

**3. REFER** : Jesus said, `Search the Scriptures' (John 5:39). We are commanded to `search from the book of the Lord and read' (Is. 34:16). Diligent search will give us a better grasp of the entire bible. We are to compare scripture with scripture. Bereans were more noble-minded than the Thessalonians because they searched the scriptures daily to find out whether these things were so (Acts 17:11).

**4. REFORM** : Mere knowledge puffs up. It leads to intellectual arrogance. Knowledge must be applied. Trust must be practised. All understanding must lead to obedience. Life must be reformed. The Bible is not just to inform but to reform and transform (James 1:22). Do not postpone obedience. Every act of obedience gets you new revelations.

**5. REMOVE** : The word of God is a seed. Our life is soil. God wants that we abound in fruitfulness. But there are some hindrances and hurdles that must be removed for maximum fruitfulness. Otherwise, we will keep receiving without reproducing. Fellowship with unbelievers (Ps. 1:1), worldliness and covetousness (Matt. 13:22) and faulty interpersonal relationships (1 Peter 2:1,2) are to be removed for the Word to produce maximum blessing in our lives.

**6. RELATE** : Share with others whatever you have learnt from the Bible. Beware of stagnation. We receive to give out. Sharing need not be always in the form of preaching. Truths can be passed on in conversations, through letters, in Bible study groups, care cells etc. Jesus spoke many precious truths while walking through fields. Give it shall be given to you (Luke 6:38; Pro. 11:25, 26)

**7. REVERE** : All Bible knowledge should lead to the worship of the Lord. The supreme purpose of the study of the Word of God is to know the God of the Word. And the knowledge of God enhances worship. Theology should always lead us to doxology (Ps. 138:2)!

## நல்ல சபை அங்கத்தினர்களுக்குரிய குணாதிசயங்கள் :

1. சபை அங்கத்தினர்கள் இரட்சிக்கப்பட்டும், இரட்சிப்பின் நிச்சயம் பெற்றவர்களாயும் இருக்க வேண்டும் (யோவான் 1:11 -13/எபே. 2:8,9/1 யோவான் 5:13).
2. சபை அங்கத்தினர்கள் வேதாகமத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும் (மத். 28:18-21).
3. தவறாமல் சபைக்குச் செல்கிறவர்களாய் இருக்க வேண்டும்.
(அப். 14:27/எபி. 10:25).
4. ஒருமனப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் (அப். 2:46/4:32).
5. வசனத்தின்படி நடப்பவர்களாய் இருக்க வேண்டும் (2 கொரி. 6:14-18).
6. சத்திய வசனத்தை வாசிப்பவர்களாகவும், உபதேசத்தில் நிலைத்திருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். (2 தீமோ. 2:15).
7. ஒருவருக்கொருவர் ஜெபிக்கிறவர்களாயும், ஆத்துமாக்களுக்காகவும், ஒற்றுமைக்காகவும், போதகர்களுக்காகவும், சபை மூப்பர்களுக்காகவும், ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்காகவும் ஜெபிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும் (லூக்கா 18:1).
8. கொடுப்பவர்களாய் இருக்க வேண்டும் (மல்கி. 3:7-11).
9. தேவ ஆவியால் நிரம்பியவர்களாகவும், ஆத்தும ஆதாயம் செய்பவர்களாகவும் இருக்க வேண்டும் (அப். 1:8/எபேசி. 5:18/கலாத். 5:22-25).
10. சபை ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் (1 கொரி 15:58).

---

## CHARACTERISTICS OF AN IDEAL CHURCH MEMBER

1. Church members should be saved & sure of it (John 1:11-13; Eph. 2:8, 9; 1 John 5:13).
2. Church members should be baptized biblically (Matthew 28:18-21).
3. Church members should be attend their church faithfully (Acts 14:27; Heb. 10-25).
4. Church members should be cooperative (Acts 2:46; 4:32).
5. Church members should be consistent (2 Corinthians 6:14-18).
6. Church members should be students of the Bible (2 Timothy 2:15).
7. Church members should be pray for one another (Luke 18:1). Praying for souls, unity, pastor, elders, Sunday school teachers, etc.
8. Church members should be givers (Malachi 3:7-11).
9. Church members should be spirit filled soul winners (Acts 1:8; Eph.5:18; Gal. 5:22-25).
10. Church members should be committed to the ministries of the church (1 Corinthians 15:58).

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am, 11.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st & 3rd Sunday-4.30 pm | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Youth Fellowship | 1st & 3rd Sunday<br>முதல் மற்றும்<br>மூன்றாம் ஞாயிறு<br>4.30 pm - 6.00 pm | வாலிபர் ஐக்கியம் |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>6.30 pm - 9.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>9.00 a.m - 9.00 p.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Assistant Pastors**

Pr. I. Joseph Samuel
88700 74415
Pr. S. Santhosh Yobu
95973 28741

**Scan & Give**

Paytm G Pay PhonePe

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m, 11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages

*Come with your friends & family & Receive the blessings of God*

Sunday School is conducted for kids below 14 years



**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org